செய்தி மக்கள் தொடர்பு துறை
செய்தி வெளியீடு எண் : 108 நாள் : 24/2

# செய்தி

படைப் பணியிலிருந்து விடுவிக்கப்படும் முன்னாள் படைவீரர்கள் அனைவருக்கும் மறு வேலைவாய்ப்பு அளிப்பது என்பது இயலாத நிலை என்பதால் அதன் மாற்று ஏற்பாடாக வேலூர் மாவட்ட முன்னாள் படைவீரர்கள் மற்றும் அவர்தம் சார்ந்தோர் சுயத்தொழில் தொடங்கிட ஊக்குவிக்கும் பொருட்டு தொழில் முனைவோர் கருத்தரங்கு வேலூரில் உள்ள இராணுவத்தினர் மாளிகையில் (முன்னாள் படைவீரர் நல அலுவலகம்) தரைத்தளத்திலுள்ள கூட்ட அரங்கில் 28.02.2017 அன்று காலை 10.00 மணிக்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்கள் தலைமையில் நடைபெறயுள்ளது. இக்கூட்டத்தில் பல்வேறு துறைகளின் சார்பில் அலுவலர்கள் கலந்துகொண்டு திட்டங்கள் தொடர்பாக விளக்க உள்ளனர். எனவே வேலூர் மாவட்டத்தைச் சார்ந்த முன்னாள் படைவீரர்கள் அதிகளவில் இக்கருத்தரங்கில் கலந்துகொண்டு பயனடையுமாறு வேலூர் மாவட்ட முன்னாள் படைவீரர் நல துணை இயக்குநர் எக்ஸ் பிளைட்.லெப்.ச.மணிவண்ணன் அவர்கள் கேட்டுக் கொள்கிறார்.

துணை இயக்குநர்
முன்னாள் படை வீரர் நலம்
வேலூர் மாவட்டம் (இ)
வேலூர்-632 001.

24/2/17

செ.ம.தொ.அ.
வேலூர் - 9.
25/2/17